நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

# CC. No. 592 /2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சின்னப்பன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அர்த்தனாரி |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 12–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.48PM.

1. நான் தற்போது தொளசம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 30.03.2025ம் தேதி காலை 10 மணிக்கு நங்கவள்ளி காவல் நிலையத்தில் பணி புரிந்தபோது காவல்நிலைய உதவி ஆய்வளார் கார்த்திக், முதல் நிலை காவலர் சார்லஸ் 2070 ஆகியோர் நங்கவள்ளி காவல் நிலைய சரகம் பெரியசோரகை கிராமம் கள்ளியூர் அருகே மதுவிலக்கு சம்பந்தமாக காலை 10.30 மணிக்கு ரோந்து அலுவலில் இருந்தபோது

பின்னர் பெயர் விலாசம் தெரிந்த கோபால் என்பவர் அவர் வீட்டிற்கு பின்புறமாக இருந்து எங்களை பார்த்தவுடன் ஓடினார். அவரை பிடித்து விசாரிக்க அரசு மதுபாட்டில்களை அரசு அனுமதியின்றி லாபத்திற்காக விற்க வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார்.

2. அவர் வைத்திருந்த Xpress Brandy 6 பாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் அவர்கள் மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும், முதல் நிலை காவலர் சார்லஸ் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரிங்ல உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிறகு எதிரியுடன் வழக்கு சொத்தையும் எடுத்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கமான ரோந்து பணிக்கு தான் சென்றோம்.குறிப்பாக எதிரி வீட்டில் மதுபானம் விற்கப்படுவதாக ரகசிய தகவல் கிடைக்கபெறவில்லை. எதிரிக்கு சுமார் 60 வயதிற்கு மேல் இருக்கும். எதிரியின் வீடு அட்டை வீடாகும். எதிரியின் வாசல் கிழக்கு பார்த்த வீடாகும். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும்போது எதிரி மட்டும் தான் இருந்தார். அவரது மனைவி அவர் வைத்திருக்கும் மாவரைக்கும் கடையில் இருந்தார். வீட்டிற்கு பின்புறம் இருந்த முட்புதரில் மது பாட்டில்களை வைத்திருந்தார். உதவி ஆய்வாளர் கார்த்திக்தான் அந்த மதுபான பாட்டில்களை எடுத்தார்.

2. அந்த மதுபான பாட்டில் பிளாஸ்டிக் கேரி பாக்கெட்டில் வைக்கப்பட்டிருந்தது. கைப்பற்றுதல் மகஜரில் கேரிபேக்குடன் கைப்பற்றபட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு சுமார் 50 அடி தூரத்தில் சுமார் 2,3 வீடுகள்தான் இருக்கும். அந்த வீடுகள் யாருடையது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் சுமார் ஒரு மணிநேரம் இருந்திருப்போம். அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் முதல் நிலை காவலர் சார்லஸ் என்பவர் கையெழுத்து செய்தார்.

3. நாங்கள் சம்பவ இடத்தில் இருந்தபோது பொது மக்கள் யாரும் அங்கு வரவில்லை. அ.சா.ஆ1 கைப்பற்றுதல் மகஜரை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தார். காவல் உதவி ஆய்வாளர் காவல் நிலைத்திற்கு தகவல் சொல்லி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து கொண்டு வந்து கொடுத்தார்கள்.அ.சா.ஆ 1கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிலையத்தில் கடைசியாக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைக்கு அடுத்த எண்ணை குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்தோம்.

4. முதல் தகவல் அறிக்கை CCTNS மென்பொருளில் உள்ளீடு செய்தால் தான் அதற்கு பின்னிட்டு ஆவணங்களை பதிவு இறக்கம் செய்து அச்சிட முடியும்என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் நான் கையெழுத்து செய்த தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றி மதுபாட்டில்களை புகைப்படம் எடுத்தீர்களா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தார். பின்பு அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

5. எதிரியிடமிருந்து மதுபானங்களை வாங்கியவர்களை யாரையும் நாங்கள் விசாரிக்கவில்லை. அதிக விலைக்கு எதிரி விற்ப்பதாக எங்களுக்கு புகாரும் வரவில்லை. நான் சொன்னவாறு எதிரி மதுபானங்களை விற்க வில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் புள்ளி விவரக் கணக்கிற்காக பொய் வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மதுபான பாட்டில்கள் எந்த கடையில் வாங்கபட்டது என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.09PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**